# செம்மறி ஆடு பராமரிப்பில் மூலிகை வைத்தியம்



மசால் உருண்டை கொடுத்தல்





குடற்புழு மருந்து கொடுத்தல்

சேவா, மதுரை

# செம்மறி ஆடு பராமரிப்பில் மூலிகை வைத்தியம்

---

- குடற்புழு மருந்து கொடுத்தல்
- நீலநாக்கு நோய்க்கு மருந்து கொடுத்தல்
- மசாலா உருண்டை கொடுத்தல்

---


பெ. விவேகானந்தன்
**சேவா**
45, டி.பி.எம். நகர், விராட்டிபத்து
மதுரை - 625 010



*நூல் வெளியிட உதவியவர்கள் :*
**டாடா தான் அகாடமி,** மதுரை
ACEDRR, Tata-Dhan Academy
OXFAM-America

நவம்பர் 2008

# செம்மறி ஆடு பராமரிப்பில் மூலிகை வைத்தியம்

- குடற்புழு மருந்து கொடுத்தல்
- நீலநாக்கு நோய்க்கு மருந்து கொடுத்தல்
- மசாலா உருண்டை கொடுத்தல்

## முன்னுரை

செம்மறி ஆடு வளர்ப்பு இன்று ஏழை எளிய மக்களுக்கு நல்ல வருமானம் தரும் தொழிலாக உள்ளது. கிராமப்புறத்தில், குறிப்பாக வறட்சியான பகுதியில் அல்லது கால்நடை வளர்ப்பை முழு நேரத் தொழிலாகக் கொண்டவர்களுக்கு செம்மறி ஆடு வளர்ப்பு வாழ்வாதாரத்தை அளித்து வருகிறது. செம்மறி ஆடு, விவசாயிகளுக்கு உபரி வருமானம் தரும் தொழிலாகவும், முழுநேர கிடைக்காரார்களுக்கு குலத்தொழிலாகவும் உள்ளது. தமிழ்நாட்டில் செம்மறி ஆட்டு இனங்களில் முக்கியமாக “வெம்பூர் இனம்” தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களிலும், “கீழக்கரிசல் இனம்” திருநெல்வேலி மாவட்டத்திலும், “மேச்சேரி இனம்” சேலம், ஈரோடு மாவட்டங்களிலும் “கச்சக்கட்டி கருப்பு இனம்” மதுரை மாவட்டத்திலும், “குறும்பை இனம்” கோவை மாவட்டத்திலும் மற்றும் “இராமநாதபுரம் வெள்ளை இனம்” தென் மாவட்டங்களில் பரவலாகக் காணப்படுகிறது. இந்த நாட்டு இனங்களைப் பராமரித்து வருபவர்களிடையே செம்மறி ஆடுகள் திடீரென இறந்துவிடும். இது குறிப்பாக மழைக் காலத்தில் அதிகமாகக் காணப்படும். செம்மறி ஆடுகளுக்கு கிடைக்காரார்கள் மருந்துக் கடையில் “நில்வர்ம்” அல்லது “அல்பெண்டசோல்” போன்ற குடற்புழு நீக்க மருந்தை வாங்கிப் பயன்படுத்துவார்கள். இம்மருந்து கொடுத்த நாளில் ஆடு கிரக்கமாக இருந்து பின்னர் தெளியும்.

இதுபோன்ற சமயத்தில் செம்மறி ஆடுகளை இயற்கையான முறையில் நன்கு பராமரித்து நோய் வராமல் பாதுகாக்க வழியிருக்கிறதா என்று பார்த்தால்

வழிகள் நிச்சயம் உண்டு எனக் கூறத் தோன்றுகிறது. சுகாதார முறையில் பராமரிப்பு முறைகள், மழைக் காலத்தில் புற்களில் உள்ள நீர்த்துளி காய்ந்தபின் சற்று நேரம் தாழ்த்தி மேய்ச்சலுக்குக் கொண்டு செல்லுதல், சுத்தமான நீர் குடிக்க விடுதல், கட்டுத்தரையை சுத்தமாக வைத்தல், இரவில் சில நாட்களில் இடம் மாற்றி அமர்த்துதல் போன்றவற்றைக் கடைபிடித்தல் அவசியமாகும். இவை தவிர நோய் வரும் முன் இயற்கை வழி தீர்வு முறையான மூலிகை மருந்து கொடுக்கும் பாரம்பரிய வழியில் பராமரிப்பது தற்சமயம் அரிதாக உள்ளது. இளைய தலைமுறைக்கு மூலிகை வைத்தியம் செய்வது தெரியாமல் உள்ளது அல்லது இதில் நம்பிக்கையும் இல்லை. எளிய வழி தீர்வு முறைகளைக் கையாளுவதை எடுத்துக் கூற யாரும் முன்வரவில்லை.

கால்நடை மருத்துவக் கல்லூரி பாடத்திட்டத்திலும் ஆங்கில மருந்து மூலம் தீர்வுகாணும் முறை மட்டும் உள்ளது. "சேவா" தொண்டு நிறுவனம் கிராமப்புறத்தில் சில அனுபவம்மிக்க வயதில் முதிர்ந்த கால்நடை மூலிகை வைத்தியர்களின் வைத்திய அனுபவங்களைத் தொகுத்து வந்துள்ளது. இந்த அனுபவங்களை இளைய தலைமுறையினருக்கும், விவசாயிகளுக்கும் எடுத்துக் கூறி இதன் மூலம் செம்மறி ஆடு தொழில் நட்டம் ஏற்படாமல் குறிப்பாக திடீரென செம்மறி ஆடுகளுக்கு இறப்பு ஏற்படாமல் இருக்க ஓர் ஆராய்ச்சியை மேற்கொண்டது. இதன்படி செம்மறி ஆடு பராமரிப்பில் குடற்புழு மருந்து கொடுத்தல், மசாலா உருண்டை கொடுத்தல், நீலநாக்கு நோய்க்கு மருந்து கொடுத்தல் இவைகளில் உண்டான அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.

## குடற்புழு மருந்து கொடுத்தல்

ஈரோடு மாவட்டத்தில் நல்லாம்பாளையம் கிராமத்திலும், மதுரை மாவட்டத்தில் கச்சக்கட்டி கிராமத்திலும், தூத்துக்குடி மாவட்டத்தில் வெம்பூர், மெட்டில்பட்டி, கீழக்கரந்தை, மேலக்கரந்தை, பட்டிதேவன்பட்டி, மாவிலிப்பட்டி ஆகிய கிராமங்களிலும் 72 விவசாயிகள் அல்லது ஆடு பராமரித்து வரும் நபர்களைத் தேர்வு செய்தோம். இவர்களிடம் 2385 செம்மறி ஆடுகள் உள்ளன. இந்த செம்மறி ஆடுகளுக்கு மாதம் ஒருமுறை மூலிகை திரவ மருந்தும், அடுத்த மாதம் மசாலா உருண்டை என்ற முறையில் மாறி மாறி கொடுத்து வந்தோம்.

## மருந்து கொடுத்த முறை

| | | |
|---|---|---|
| முதல் மாதம் (ஏப்ரல் 08) | – | குடற்புழு மூலிகை மருந்து கொடுத்தல் |
| 2வது மாதம் (மே 08) | – | மசாலா உருண்டை அளித்தல் |
| 3வது மாதம் (ஜூன் 08) | – | குடற்புழு மூலிகை மருந்து கொடுத்தல் |
| 4வது மாதம் (ஜூலை 08) | – | மசாலா உருண்டை அளித்தல் |
| 5வது மாதம் (ஆகஸ்ட் 08) | – | குடற்புழு மூலிகை மருந்து கொடுத்தல் |
| 6வது மாதம் (செப்டம்பர் 08) | – | மசாலா உருண்டை அளித்தல் |

## குடற்புழு மருந்து தயார் செய்தல்

குடற்புழு மருந்தை ஈரோடு மாவட்டம் கருக்கம்பாளையம் கிராமத்திலுள்ள திரு. செல்லமுத்து அவர்களிடமிருந்து கரைசலாகப் பெற்றுக் கொண்டோம். செல்லமுத்து குடற்புழு மருந்தை கீழ்க்கண்டவாறு தயாரித்துக் கொடுக்கிறார்.

| *மருந்து பொருட்கள்* | *அளவு* |
|---|---|
| பீநாரி சங்கு செடி | 1 கிலோ |
| எருக்களை | 1 கிலோ |
| வேப்பங்கொட்டை | 1 கிலோ |
| சோற்றுக் கற்றாழை | 1 கிலோ |
| நொச்சி தழை | 1 கிலோ |

ஒவ்வொன்றும் 1 மடங்கு என்ற விகிதத்தில் எடுத்து சேர்த்து ஆட்டி சாறு எடுத்து வடிகட்டி வைத்துக் கொள்கிறார். இந்த மூலிகை கரைசல் ஆடு, மாடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்தாகக் கொடுக்கப்படுகிறது. வளர்ந்த செம்மறி ஆடுகளுக்கு 30 மி.லி., குட்டிகளுக்கு 10 மி.லி. என்ற அளவில் காலையில் வெறும் வயிற்றில் ஊற்ற வேண்டும்.

சில ஆடுகளுக்கு ஆங்கில மருந்தான "பென்பண்டசோல்" மட்டும் (ஒரு ஆட்டிற்கு 10 மி.லி. விகிதம்) கொடுக்கப்பட்டது. சில ஆடுகளுக்கு எந்தவித மருந்தும் கொடுக்கப்படவில்லை.

மேற்கூறப்பட்ட 3 வகை பிரிவு ஆடுகளிலிருந்தும் புழுக்கை மாதிரி பெறப்பட்டு சாணத்தில் புழுக்கள் உள்ளனவா என்று சோதனை செய்யப்பட்டது. ஆடுகள் மேய்ப்புத்தன்மையும், போடும் புழுக்கையும் கவனிக்கப்பட்டது. பின்னர் சோதனை முடிவு பின்வருமாறு இருந்தது.

| மருந்து கொடுத்த முறை | சாணத்தில் புழு குறைந்த சதவீதம் | |
|---|---|---|
| | நல்லாம்பாளையம் | வெம்பூர் |
| மூலிகை மருந்து கொடுக்கப்பட்ட ஆடு | 73.65% | 88.64% |
| "பென்பண்டசோல்" கொடுக்கப்பட்ட ஆடு | 94.18% | 78.87% |

## ஆடுகளுக்கு மசாலா உருண்டை அளித்த விபரம்

சேவா களப் பணியாளர்கள் மூலம் ஆடுகளுக்கு பெருநெல்லிக்காய் அளவு மசால் உருண்டைகள் தயார் செய்யப்பட்டு ஒரு ஆட்டுக்கு ஒரு உருண்டை என 2 மாதங்களுக்கு ஒரு முறை தரப்பட்டது.

## மசால் உருண்டை தயார் செய்யும் விதம்

கண்டங்கத்திரி, சிறுதும்பை, குப்பைமேனி, வீலி, பெருந்தும்பை, உசிலை, துளசி, ஆவாரம்பூ விராலி, மூங்கில் இலை, புளியம்பிரண்டை, துத்தி, முசுமுசுக்கை, கொளுஞ்சி, மஞ்சணத்தி, வேலிப்பருத்தி, நிலவேம்பு, கொய்யா கொழுந்து இலை, வெற்றிலை ஆகியவற்றில் வகைக்கு 50 கிராம் (ஒரு கைப்பிடி அளவு) எடுத்துக் கொண்டு நன்றாக இடிக்க வேண்டும். திப்பிலி, சீரகம், சோம்பு, பெருங்காயம், வால் மிளகு, சுக்கு, மிளகு, மிளகாய்வற்றல், கசகசா, இலவங்கம், வெந்தயம், ஓமம், மல்லி, மாவிலங்கம்பட்டை ஆகியவற்றை வகைக்கு 10 கிராம் வீதம் எடுத்து இடிக்க வேண்டும். இவைகளுடன் வாழைப்பூ 1, கல் அத்திக்காய் 100 கிராம், சோற்றுக் கற்றாழை ½ கிலோ, பிரண்டை ½ கிலோ, சிறுவெங்காயம் ¼ கிலோ, தேங்காய் 1, வெள்ளைப்பூண்டு 100 கிராம், கொல்லங்கோவை கிழங்கு 100 கிராம், வெல்லம் 100 கிராம் இவைகளை நீர் ஊற்றாமல் மொத்தமாக ஆட்டி உருண்டைகளாக்கி வைத்துக்கொள்ள வேண்டும். இந்த உருண்டைகள் ஒவ்வொன்றும் சுமார் 100 கிராம் அளவு இருக்குமாறு பிடிக்க வேண்டும். ஆடுகளுக்கும், கன்றுகளுக்கும் 50 கிராம் அளவு உருண்டைகளாகப் பிடித்து வைத்துக் கொள்ளலாம். இந்த உருண்டைகளை மஞ்சள் தூளில் உருட்டி எடுக்க வேண்டும். இதனை 4 நாட்கள் வரை கெடாமல் வைத்திருக்கலாம்.

கால்நடைகளுக்கு காலை, மாலை 3 நாட்கள் வரை கொடுத்து வரலாம். இது மாடுகளின் இளைப்பு, அடைப்பான், வயிற்றுக் கிருமி ஆகியவற்றை நீக்கப் பயன்படும்.

மசால் உருண்டை கொடுத்த பின்பு குடிநீர் போதுமான அளவு குடிக்கக் கொடுக்க வேண்டும். குடிநீர் குடித்த பின்பும் மேலும் நீர் குடிக்க நாக்கில் சோத்து உப்பை தேய்த்து விட வேண்டும். இங்ஙனம் 2–3 நாட்கள் தொடர்ந்து செய்துவர வேண்டும்.

(மசால் உருண்டை தயாரிக்கும் முறையை மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா, மேல உரப்பனூர் கிராமத்திலுள்ள வைத்தியர் மூக்கன் அவர்களிடமிருந்து பழகிக் கொண்டோம். இம்முறையை கடைப்பிடித்து இதுவரை சுமார் 15,000த்திற்கும் மேற்பட்ட ஆடு, மாடுகளுக்கு கொடுத்து நல்ல பலன் பெற்றதை நாங்கள் பார்த்து வருகின்றோம். சேவா மூலம் கொடுத்த பயிற்சியில் பல மாணவர்களுக்கு இதனைக் கற்றுக்கொடுத்து அவர்களும் தங்கள் இடங்களில் கொடுத்துப் பார்த்ததில் நல்ல பலன் கிடைத்ததைத் தெரிவித்துள்ளனர்).

## மசால் உருண்டை தரப்பட்ட ஆடுகளின் வளர்ச்சியைக் கண்டறிதல்

சாத்தூரில் உள்ள அரசு ஆட்டுப் பண்ணையில் 3–4 மாத செம்மறி ஆட்டுக் குட்டிகளுக்கு மசாலா உருண்டை தரப்பட்டது (ஜுலை – ஆகஸ்ட் 08). மசால் உருண்டை தரப்பட்ட ஆடுகளின் உடல் எடை சற்றுக் கூடுதலாக இருந்தது கண்டறியப்பட்டது. சீமைக்கருவேல் விதைகளை அளவிற்கதிகமாக தின்றுவிட்டதால் ஒரு ஆட்டிற்கு வயிறு ஊதிவிட்டது. இந்த ஆட்டிற்கு 3 மசாலா உருண்டை தர 1 மணி நேரத்தில் வயிறு ஊதல் சரியாகிவிட்டது.

## முடிவுரை

மூலிகை குடற்புழு நீக்க மருந்தும், மசாலா உருண்டையும் 2385 செம்மறி ஆடுகளுக்கு 6 மாதங்கள் மாறி மாறி மாதந்தோறும் கொடுக்கப்பட்டது. இதற்கு 72 செம்மறி ஆடு வளர்க்கும் விவசாயிகள் அல்லது கிடைக்காரர்கள் ஒத்துழைப்பை நல்கினர். இந்த ஆராய்ச்சி ஈரோடு மாவட்டத்திலுள்ள தாராபுரம் பகுதி நல்லாம்பாளையம் கிராமத்திலும், தூத்துக்குடி மாவட்டத்தில் புதூர் வட்டம் வெம்பூர் பகுதியிலும் ஏப்ரல் 2008 முதல் செப்டம்பர் 2008 வரை நடத்தப்பட்டது. இந்த ஆராய்ச்சியின்படி பின்வரும் முடிவுகளை எடுத்துக் காட்டியுள்ளோம்.

- மூலிகை மருந்து, மசாலா உருண்டை தரப்பட்ட ஆடுகள் நன்றாக மேய்ச்சலை எடுத்தன. சுறுசுறுப்பாகக் காணப்பட்டன. பெருஞ்சாணி போட்டு கழியாமல் புழுக்கை போட்டன.
- மருந்து கொடுக்கப்பட்ட ஆடுகளில் நீலநாக்கு நோய், தரை கழிச்சல், வெக்கை நோய், துள்ளுமாரி, ஆட்டம்மை, கால்காணை, வாய்க்காணை நோய் போன்ற நோய் எதுவும் தாக்கப்படவில்லை.
- குடற்புழு மருந்தை எளிதில் விவசாயிகள் அல்லது ஆட்டுக்காரர்களே தயாரிக்கலாம். நொச்சி, வேம்பு, எருக்களை, சோற்றுக்கற்றாழை, பீநாரிச்சங்கு ஒவ்வொன்றும் சமபங்கு எடுத்து ஆட்டி வடிகட்டி வைத்துக் கொள்ளலாம். (இந்த மருந்தை தயாரிக்க இயலாதவர்கள் ஈரோடு மாவட்டம், கருக்கம்பாளையம் செல்லமுத்து அவர்களிடமிருந்து தருவித்துக் கொள்ளலாம்).
- ஆங்கில மருந்தை குடற்புழு நீக்கத்திற்காக தரும் சமயம் வெயில் காலங்களில் மயக்க நிலையை உண்டாக்கும். மருந்தின் அளவு அதிகரித்துக் கொடுத்து விட்டால் இறப்பு உண்டாகும் வாய்ப்புண்டு. இத்தகைய விபரீதம் மூலிகை மருந்திற்கு உண்டாகாது.
- ஆங்கில மருந்து பயன்படுத்தும் சமயம் செம்மறி ஆட்டு மாமிசத்தில் ரசாயனப்பொருள் தேங்கும் வாய்ப்புண்டு. இது இறைச்சி உண்பவர் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும். இது போன்ற நிலைமை மூலிகை மருந்தை உபயோகப்படுத்தும் சமயம் ஏற்படாது.
- ஆங்கில மருந்தான அல்பென்டசோல், பென்பண்டசோல் போன்றவற்றை தொடர்ந்து கொடுத்துவர குடற்புழுக்களுக்கு எதிர்ப்புசக்தியை அளித்து மருந்து பயனில்லாமல் போய்விடும். ஆனால் மூலிகை மருந்துகளுக்கு இதுவரை எதிர்ப்பு சக்தி உண்டாகிய நிலைமை ஏற்பட்டதில்லை.

**நன்றி**

இந்த ஆராய்ச்சிக்கு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியிலுள்ள கால்நடை உற்பத்தி மற்றும் மேலாண்மை துறை உதவி செய்தது. இதற்கான ஆராய்ச்சி நிதி உதவியை மதுரை "டாடா தான் அகாடமி" (ACEDRR, Tata-Dhan Academy, OXFAM-America) வழங்கி ஆய்வு மேற்கொள்ள மூலகாராணமாயிருந்தது.

## பிற்சேர்க்கை

# செம்மறி ஆட்டு நீலநாக்கு நோய்க்கு சோற்றுக் கற்றாழை கொடுத்தல்

– ஓடைப்பட்டி பொன்னுச்சாமியின் அனுபவம்

### அறிகுறி

வாயில் புண் இருக்கும், வாயில் கோழை வடியும், கால் நொண்டி நடக்கும், படுத்தே கிடக்கும், தூக்கினால் ரோமம் உதிரும், சொட்டைவிழும், கொஞ்ச நாட்கள் தண்ணீர் மட்டும் அருந்தும். நோய் முற்றிய 12 அல்லது 16 நாட்களில் ஆடு இறந்துவிடும்.

### நோய்க்கான காரணம்

மழை பெய்தவுடன் பாறைகளில் தேங்கும் தண்ணீர் மற்றும் குட்டை, குளத்து தண்ணீரில் பெருகும் கொசுக்கள் மூலம் இந்நோய் பரவுகிறது. விஷக்கிருமியால் முதலில் காய்ச்சல் வருகிறது. இரண்டாவது குடல், நாக்கு, வாய், உதடுகளில் புண் ஏற்படும். மூன்றாவது கோழை என்ற மெல்லிய பசை திரவம் வாயில் இருக்கும். வாய்ப்புண், குடல் உதடு புண் இருப்பதால் தீனி எடுக்காது.

ஆடு தீனி எடுக்காமல் இருப்பதால் முதலில் நல்லெண்ணெய், வாழைப்பழம் பிசைந்து கொடுத்தேன். பின்னர் சோற்றுக் கற்றாழை கொடுத்தேன். ஆடு குணமடைந்து சுகம் கண்டது. ஐப்பசி மாதம் என்னுடைய ஆட்டிற்கு பழையபடி நீலநாக்கு நோய் ஏற்பட்டது. முன்பு நோயுள்ள ஆட்டுக்கு சோற்றுக்கற்றாழை மடலை 3 அல்லது 5 நாட்கள் கொடுக்க குணமாகிவிட்டது. தற்சமயம் நோய் வந்த ஆட்டிற்கு 40 நாட்கள் கொடுத்துத்தான் குணமானது. எப்படியிருப்பினும் சோற்றுக் கற்றாழை மடல் தினசரி வெறும் வயிற்றில் கொடுத்தால் போதும். நீலநாக்கு நோய் தீரும்.

*வைத்தியர் முகவரி :*

**என். பொன்னுச்சாமி**


ஓடைப்பட்டி கிராமம், அம்பிளிக்கை – வழி

ஒட்டன்சத்திரம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்


(தகவல் : நம் வழி வேளாண்மை – பருவம் 15 – இதழ் 4 – பக்கம் 12)



மசால் உருண்டை





வைகை, மதுரை